**OS No.64/2021**
DW 2 - சிவக்குமார்

நாள் 05.03.2026

**பி.வா.சா. 2 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்து வாதிக்குச் சொந்தம் என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கான விபரங்களை என் தகப்பனார் சிவாஜி தான் சொன்னார். அதனால் அவர் என்ன சொல்லியுள்ளார் என்ற விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது.

நான் படித்துப்பார்த்து தான் கையொப்பம் செய்தேன். நான் 1992 ம் வருடம் பிறந்தேன். வழக்கு சம்பந்தமாக ஆவணங்களை தேடிப்பார்த்த போது தொலைந்து போன 1958 ம் வருட ஆவணத்தின் நகல் எடுத்துப் பார்த்த போது தெரியவந்தது. நான் இன்டஸ்ரியல் இன்ஜினியரில் மாஸ்டர் டிகிரி படித்துள்ளேன். நான் டீ கடை பார்த்து வருகிறேன்.

தனசேகரன் என்பவரின் ஹோட்டல் என் டீ கடைக்கு கிழக்குப்பக்கம் உள்ளது. தனசேகரன், என் தகப்பனார் சிவாஜி, வழக்கின் வாதி காமாட்சி ஆகியோர்கள் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி அவர்களின் தகப்பனார் காந்திசேர்வை ஆவார். 1958 ம் வருட ஆவணத்தை நான் படித்துப்பார்த்த போது அதில் காந்திசேர்வை பணத்தைக் கொண்டு மீனாம்பாள் பெயருக்கு கிரயம் பெற்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

நிரூபண வாக்குமூலத்தில் காந்திசேர்வை தாவா சொத்தை அனுபவம் செய்து வந்ததாக சொல்லியுள்ளதற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய டீ கடையும் தனசேகரனின் ஹோட்டலும் காந்திசேர்வைக்கு பாத்தியமாக இருந்தது.

ஹோட்டல் மற்றும் இதர சொத்துக்களை காந்திசேர்வை

தனசேகரனுக்கும், சிவாஜிக்கும் பிரித்துக்கொடுத்தார் என்றால் சரிதான். அதற்கான தொகையை என் தகப்பனார் செலுத்தியுள்ளார். மேற்படி தொகையை செலுத்தியதற்கு ஆவணம் உள்ளதா என்றால் பாகவிஸ்தி பத்திரத்தில் ரூபாய் 34000/– ஐ என் தகப்பனார் செலுத்தியாக உள்ளது. அந்த பாகவிஸ்தி 1987 ம் ஆண்டு ஏற்பட்டது ஆகும். அதை நான் படித்துப்பார்த்தேன்.

நிரூபண வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் 1976 ம் வருடம் வாதிக்கு திருமணம் நடந்ததாக சொல்லியுள்ள விசயங்கள் எனக்கு நேரடியாகத் தெரியாது என் அப்பத்தா சொல்லித் தெரியும். என் அப்பத்தா மீனாம்பாள் நான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். நான் சொல்லும் அப்பத்தா அவருடன் பிறந்தவர் ஆவார்.

நிரூபண வாக்குமூலத்தில் 4 வது பத்தியில்வாய்மொழியாக பிரித்துக்கொண்டதாக சொல்வது 1987 ம் ஆண்டிற்கு பின்பு நடந்தது ஆகும். அந்த சமயத்தில் நான் பிறக்கவில்லை. அதனால் வாய்மொழி பாகம் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது.

வாய்மொழியாக பிரித்துக்கொண்டது 3 – 4 இலக்க சொத்துக்கள். அந்த 3–4 இலக்க சொத்தில் நஞ்சை, புஞ்சை, நத்தம் உள்ளதா என்றால் நஞ்சை மட்டும் தான் உள்ளது. அதற்கான பட்டா தனித்தனியாக தனசேகரன், சிவாஜி பெயர்களில் வந்துவிட்டதா என்றால் வரவில்லை, காந்தி மற்றும் அவரது தகப்பனார் காத்தமுத்து பெயரில் உள்ளது.

இரண்டாம் தாரத்து பிள்ளைகளான பாண்டி, சசிகுமார், லதா, ஜோதி ஆகியோர் பாகத்தில் கிடைத்த சொத்திற்கு அவரவர் பெயரில் பட்டா கிடைத்துள்ளது என்றால் சரியல்ல, தாத்தா பெயரில் தான் உள்ளது.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 6 ஆவணம் எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பதிவு பாகவிஸ்தி ஆவணம் ஆகும். இது சான்றிட்ட நகல் இதன் உண்மை ஆவணம் என்தகப்பனார் சிவாஜியிடம் உள்ளது. இந்த விசயங்களை நான் எனது நிரூபண வாக்குமூலத்திலோ, எதிர்வழக்குரையிலோ

சொல்லவில்லை.

நிரூபண வாக்குமூலத்தில் 6 வது பத்தியில் தாவா சொத்தை வாதிக்கு சீதனமாக கொடுக்கவில்லை என்றும் அவர் அனுபவம் செய்யவில்லை என்றும் சொல்லியிருக்கும் விசயம் வாதியின் திருமண காலத்தில் நீங்கள் பிறக்கவே இல்லை என்பதால் உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. நாங்கள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறோம். நீங்கள்விவசாயம் செய்து வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்திற்கான நிலவரி அனைத்தையும் வாதி தான் செலுத்திவருகிறார் நீங்கள் செலுத்தவில்லை என்றால் எங்கள் சித்தப்பாவின் பாகத்திற்கு அவர்கள் செலுத்தி இருப்பார்கள் எங்கள் பங்கிற்கு செலுத்தவில்லை.

தாவா சொத்து இரண்டு பிரிவாக உள்ளதற்கு ஆவணங்கள் உண்டா என்றால் நாங்கள் வாய்மொழியாக பிரித்துக்கொண்டோம். அவ்வாறு நாங்கள் பிரித்துக்கொண்டது 1987 க்கு பிறகு ஆகும். 1987 ல் நாங்கள் பிரித்த பிறகு இது வரையில் தாவா சொத்திற்கான நில வரிரீசது எங்களிடம் இல்லை.

தாவா சொத்து நீங்கள் சொல்வது போல் இரண்டு பிரிவாக இல்லை ஒன்றாகத் தான் உள்ளது என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் 7 வது பத்தியில் செல்லத்துரை என்பவரிடம் ஒத்தி வைத்திப்பதாக சொல்லியுள்ளதற்கு எங்களிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை.

மேற்படி செல்லத்துரையிடம் ஒத்திக்கு வைக்கவில்லை வழக்கிற்காக கற்பனையாக ஒத்திவைத்துள்ளதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ 15 என்ன ஆவணம் என்றால் ஒத்திப்பத்திரம். வா.சா.ஆ 15 ஆவணத்தில் உங்கள் தந்தை கையொப்பம் இருப்பதை அவரே ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் அவர் மறதியில் சொல்லியிருப்பார் ஆனார் அவர் கையெழுத்து அல்ல. பி.வா.சா. 1 சாட்சியத்திலும வா.சா.ஆ 14 உள்ள வா.சா.ஆ

15 கையெழுத்தை என் தகப்பனார் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார் என்பதை படித்து தெரிந்து கொண்டேன்.

நீங்கள் உங்கள் தகப்பனார் கையெழுத்து மறதியாக போட்டிருப்பார் என்று சொல்வது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்ததையே மறுத்து சொல்வது சட்டவிரோதமானது என்றால் சரியல்ல.

நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளித்தால் தண்டிக்கப்படக் கூடிய குற்றம் என்பது எனக்குத் தெரியும். தெரிந்திருந்தும் நீங்கள் சாட்சியம் அளிப்பது குற்றம் என்றால் நான் பொய் சாட்சி அளிக்கவில்லை.

வாதி 1995 ம் ஆண்டில் தாவாச் சொத்தை தங்கம் என்பவருக்கு ஒத்திக்கு வைத்துள்ளார் என்றால் அந்த ஆவணத்தை தற்போது தான் பார்க்கிறேன் அது பற்றி எனக்குத் தெரியாது. ஏற்கனவே வழக்குரையில் ஒத்திக்கு வைத்துள்ள விசயத்தை சொல்லியுள்ளார்கள் நீங்கள் தற்போது தான் தெரியும் என்றால் சரியல்ல. நீங்கள் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

1998 ல் அதே தங்கம் என்பவருக்கு ஒத்திக்கு வைத்துள்ளார்கள் என்றால் அது எங்கள் சித்தப்பாவின் பாகத்தை ஒத்திக்கு வைத்துள்ளார்கள். எங்கள் பாகத்தை அல்ல. தாவாச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் 50 செண்ட் அதன் சர்வே எண் 111/10 ஆகும்.

வா.சா.ஆ 4 ஆவணத்தில் தாவா மொத்த சொத்தையும் ஒத்திக்கு வைத்தாக உள்ளது, சித்தப்பாவின் பாகத்தை வைத்ததாக இல்லை என்றால் அவர்களுக்குள் ஏற்படுத்திக்கொண்டார்கள்.

நிரூபண வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் சர்வே எண் 125/8 யாருக்கு பாத்தியம் என்றால் எங்கள் முன்னோர்கள் பெயரில் உள்ளது. முன்னோர்கள் பெயர் என்னவென்றால் எங்கள் பாட்டையா காத்தார் பெயரில் உள்ளது.

நிரூபண வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் சர்வே எண்

125/8 என்று தான் சொல்லியுள்ளேன் பட்டா எண் சொல்லவில்லை. தற்போது நிரூபண வாக்குமூலத்தைப் பார்த்து பட்டா எண் 588 என்று சொல்லியிருப்பதாக சாட்சி ஒப்புக்கொள்கிறார்.

சர்வே எண் 125/8 க்கான பட்டா எண் 588 ல் காந்தி, கருப்பையா, போஸ் மற்றும் மணி ஆகியோர்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நான்கு பேர் பெயரில் இருப்பதை மறைத்து காத்தாரின் மக்கள் பெயரில் உள்ளது.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**